## **கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**O.S. No. 38/2017** **20.06.2024.**

திரு. தெய்வசிகாமணி, த/பெ வேலுச்சாமி (D.W –2)

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வழக்கு தரப்பினர்கள் அனைவரும் எனது உறவினர்களா என்றால் இல்லை. வழக்குச் சொத்தில் எனக்கு பங்கு பாத்தியது எதுவும் இல்லை. சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. தயாநிதி என்பவர் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல, சரஸ்வதி அழைத்தார். மேற்படி சரஸ்வதி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளரா என்றால் இல்லை. தயாநிதி என்பவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. தயாநிதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாட்சியிடம் தயாநிதி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளதாக வாதி தரப்பு வழக்கறிஞர் சுட்டி காட்டிய சமயம் அதை ஏற்றுக் கொண்டு வந்துள்ளதாக சாட்சி ஒத்துக் கொண்டார். மேற்படி தயாநிதி என்பவர் சொல்லிக் கொடுத்ததின் பேரில் தவறாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தயாநிதி என்பவரிடம் சம்பளத்திற்கு வேலை செய்கிறேன் என்றால் இல்லை. அவருக்கும், எனக்கும் சம்மந்தம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சல் அட்டையில் உள்ள தெய்வசிகாமணி என்ற பெயர் உள்ளது அதில் உள்ள கையெழுத்தும், முகவரியும் என்னுடையது அல்ல. தாவாச் சொத்து டையிங் பேக்டரி என்றால் சரிதான். மேற்படி டையிங் பேக்டரி பெரிய அளவில் உள்ளது என்றால் ஓரளவிற்கு தான் உள்ளது. மேற்படி சொத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓடு, தகர செட்டுகள் சுமார் 20 ஆயிரம் சதுரடி பரப்பளவில் உள்ளது என்றால் செட்டுகள் உள்ளது ஆனால் பரப்பளவு தெரியவில்லை. நானும், தயாநிதியும் ஒன்று சேர்ந்து நான் செட்டில் வாடகைக்கு இருப்பதாக பத்திரங்களை உருவாக்கினோம் என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது எனக்கும், தயாநிதிக்கும் வாதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் இல்லை. நானும், தயாநிதியும் ஒன்று சேர்ந்து 21.05.2019 அன்று எங்கள் வழக்கறிஞர் மூலமாக பதிலறிவிப்பு கொடுத்தோம் என்றால் அவ்வாறு கொடுத்ததாக எனக்கு நினைவில்லை. எனது தகப்பனார் பெயர் வேலுச்சாமி

என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பதிலறிவிப்பு வேலுச்சாமி மகன் தெய்வசிகாமணி மற்றும் சோமசுந்தரம் மகன் தயாநிதி ஆகியோர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு.A.சின்னசாமி அவர்கள் பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் நான் கொடுக்கவில்லை தயாநிதி கொடுத்திருக்கலாம். மேற்படி பதிலறிவிப்பில் நான் தயாநிதியிடம் மேலாளராக இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. மேற்படி பதிலறிவிப்பு அனுப்பிய பிறகு நானும் மேற்படி தயாநிதியும் விடுமுறை கால நீதிமன்றத்தில் ஒரு எதிர்பார்ப்பு மனு தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் சார்வு செய்யப்பட்ட நகல் தான் மேற்படி நகல் என்றால் சரிதான். அது **வாசாஆ.36** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தயாநிதி சொன்னதன் அடிப்படையில் நான் கையெழுத்து போட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் சாயப்பட்டறை பிளாஸ்டிக் டிரம்ப்கள், அட்டைப் பெட்டிகள், கெமிக்கல் கேன்கள் மற்றும் கழிவுப் பொருள்களை வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்ததாகவும் அதன் அடிப்படையில் வாதியின் தகப்பனார் ராமசாமி கவுண்டர் அவரது மனைவி சரஸ்வதி ஆகியோர்களை தெரியும் என்று சொல்லியுள்ளது சரியல்ல என்றால் தவறு. ராமசாமி கவுண்டருக்கு இரண்டு பெண் மக்கள், இரண்டு ஆண் மக்கள் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளார்கள். அவரது மக்களையும், மருமகன்களையும் தெரியுமா என்றால் முத்துக்குமார் மட்டும் தான் தெரியும். 2006ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை பிரின்ஸ் டையிங்–ல் சாயப்பட்டறை கழிவு வாங்கி வியாபாரம் செய்து கொண்டிருந்தேன் என்று கூறுகிறேனா என்றால் ஆமாம். ராமசாமி கவுண்டர் 2011ம் ஆண்டு கடைசியில் காலமாகிவிட்டார் என்றால் ஆமாம். ராமசாமி கவுண்டரும் அவரது மகன் ரத்தினசாமியும் மேற்படி தொழிலை கூட்டாக செய்து வந்தார்கள் என்றும், அதனால் ரத்தினசாமியை எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல, அப்பாவை தான் தெரியும். அவர் மட்டும் தான் தொழில் செய்து வந்தார். ராமசாமி கவுண்டர் இறப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன்பிலிருந்தே நரம்பு பிரச்சனை ஏற்பட்டு நடமாட முடியாமல் நினைவில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. நான் மேற்படியாக வியாபாரம் செய்து வந்தேன் என்று காண்பிக்க ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் 2011 ஜுலை மாதத்தில் ராமசாமி கவுண்டர் தன் மனைவிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுத பத்திர எழுத்தர்

அலுவலகத்திற்கு நான் அவரை காரில் அழைத்துச் சென்றதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி ராமசாமி கவுண்டர் பையில் சில ஆவணங்களை வைத்திருந்ததாகவும், அதை பத்திர எழுத்தரிடம் கொடுத்து செட்டில்மெண்ட் பத்திரத்தை தயாரிக்க சங்கதிகள் சொன்னதாகவும், பத்திர எழுத்தர் ஒரு வெள்ளை தாளில் மாதிரி ஆவணத்தை தயாரித்ததாகவும், என்னை பின்னிட்டு முத்திரைத் தாள்கள் வாங்கி வரச் சொன்னதாகவும், நானும், ராமசாமி கவுண்டரும் இரண்டு 5 ஆயிரம் ரூபாய் தாள்களை வாங்கி வந்ததாகவும், அன்றைய தினம் நேரம் அதிகமானதால் மறுநாள் சாட்சிகளுடன் வருமாறு பத்திர எழுத்தர் சொன்னதாக நான் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. மறுநாள் பகல் 12–1/2 மணியளவில் நான் ராமசாமி கவுண்டரின் வீட்டிற்கு சென்றதாகவும், அங்கு அவரது மருமகன் முத்துக்குமார் மற்றும் அவருக்கு தெரிந்த ஒரு நபர் இருந்ததாகவும், அவர்களுடன் நாங்கள் பத்திர எழுத்தர் அலுவலகம் சென்றதாகவும், அங்கு பத்திர எழுத்தர் ஏற்கனவே வெள்ளைத் தாளில் தயாரித்து வைத்திருந்ததாக சங்கதிகளை முத்திரைத்தாளில் தயாரித்ததாகவும், அதை அவர் படித்து காண்பித்ததாகவும், அதனை ராமசாமி கவுண்டர் சரி என்று ஒத்துக் கொண்டு ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து போட்டதாக நான் கூறும் சங்கதி தவறானது என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டரின் மகன் கோவிந்தராஜ் குடும்பத்தை விட்டு பிரிந்து பெற்றோர்களின் விருப்பத்திற்கு விரோதமாக வெளியேறி விட்டதால், ராமசாமி கவுண்டர் இறந்துவிட்டால் சொத்தைப் பொறுத்து தகராறு ஏற்படும் என்பதால், ராமசாமியின் மனைவியும் அவரது இரண்டு பெண் மக்களும், சரஸ்வதியின் பெயரில் ஒரு பத்திரத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து மருமகன் முத்துக்குமார் மூலமாக ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்து வீட்டிற்கு எடுத்துச் சென்று ஏற்கனவே நினைவில்லாமல் இருந்த ராமசாமியிடம் கையெழுத்து, கைரேகை பெற்றுக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. பத்திர அலுவலகத்திற்கு வர இயலாத ராமசாமியை கைத்தாங்கலாக காரில் ஏற்றிச் சென்று என்ன ஆவணம் என்று தெரியாத நிலையில், அந்த ஆவணத்தில் கையெழுத்து பெற்றுக் கொண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் ராமசாமி கவுண்டர் நல்ல மன நிலையில் அதை புரிந்து கொண்டு சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து செய்ததாகவும், அதை ராமசாமி கவுண்டர் பார்த்ததாகவும், அவற்றை நானும் பார்த்ததாகவும் ஒரு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எனக்கு பத்திரம் எழுதிய விபரமும், அது பதிவு செய்யப்பட்ட விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போடவில்லை என்றால் ஆமாம். சாட்சி கையெழுத்து போட்டதைத் தான் பார்த்தேன். மேற்படி ராமசாமி கவுண்டர் பத்திர பதிவாளரிடம் தனது மனைவி பெயரில் ஆவணம் எழுதி வைப்பதாகவும், அதற்குண்டான தொகையை செலுத்தியதாகவும் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு ராமசாமி கவுண்டல் நல்ல மனநிலையிலும், உடல் நிலையிலும் இருந்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி ராமசாமி கவுண்டர் கையெழுத்து போட்டதை சாட்சிகள் பார்த்ததாகவும், சாட்சிகள் கையெழுத்து போட்டதை ராமசாமி கவுண்டர் பார்த்ததாகவும் கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் பத்திர அலுவலகத்திலிருந்து அனைவரையும் காரில் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டதாக கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாது என்றும், நான் தயாநிதியிடம் வேலை செய்த வருவதால் அவருக்காக ஒரு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துக்குமார் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரஸ்வதி அம்மாள் சொன்னதின் பேரில் தெரிந்து கொண்டேன். முத்துக்குமார் உண்மை நிலையினை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளார் என்றும், அதற்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

ராமசாமி கவுண்டருடன் எத்தனை ஆண்டுகளாக எனக்கு பழக்கம் இருந்தது என்றால் 7–8 ஆண்டுகள் இருக்கும். அவரது குடும்பத்தை பற்றி என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அவர் சாகும் வரை தனது நான்கு வாரிசுகளுடனும் நல்ல இணக்கமாக இருந்தார் என்றால் இல்லை. மேற்படி ராமசாமி கவுண்டர் தனது குடும்ப சங்கதிகளை என்னுடன் பகிர்ந்து கொள்வாரா என்றால் ஆமாம். மேற்படி ராமசாமி கவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது ஈமச்சடங்கில் கலந்து கொண்டேனா என்றால் இரண்டு நாட்கள் கழித்து தான் சென்று பார்த்தேன். இறப்பு குறித்து எந்த வகையில் தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தெரிந்தவர் மூலமாக தான் தகவல் தெரிந்தது. நேரடியாகச் சென்று அவரது மனைவி மக்களிடம் துக்கம் விசாரித்தேனா என்றால் மனைவியை மட்டும் தான் சந்தித்தேன். அவர் காலமான பின்னிட்டு, அவர்

நடத்தி வந்ததாக கூறும் டையிங் பேக்டரிக்கு சென்றேனா என்றால் இல்லை. மேற்படி டையிங் பேக்டரியை இறந்து பின்னிட்டு யார் பார்த்து வந்தார் என்றால் தெரியாது. நான் மேற்படி ராமசாமியுடன் தொழில் செய்திருந்தால் அவரது ஈமச்சடங்கில் கண்டிப்பாக கலந்து கொண்டிருப்பேன் என்றும், அவ்வாறு அவருடன் தொழில் செய்யவில்லை என்பதால் தான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் என்பவர் என்ன உயரம் என்றால் சாதாரண உயரம் தான், என்ன நிறம் என்றால் மாநிறம் தான். பத்திர பதிவு அலுவலகத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சரஸ்வதி, தயாநிதி, சுமதி ஆகியோர்களுக்கு வேண்டப்பட்டவர் என்றால் சரஸ்வதியை மட்டும் தான் தெரியும். தயாநிதி, சுமதியை தெரியாது என்றால் ஆமாம். மேற்படியார்களை எனக்கு நன்றாக தெரியும் என்றும், உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு பத்திரம் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**2, 3, 4 பிரதிவாதிகளின் தரப்பு வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/—S. ராமசந்திரன்
கூடுதல் சார்பு நீதிபதி(FAC),
திருப்பூர்.